31.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மாவட்டத்தில் பரவலாக மழை

விழுப்புரம் மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக இரவு நேரங்களில் மழை பெய்து வருகிறது.

தமிழகக்தில் வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுக்க காழ்வு நிலை காரணமாக விழுப்புரம் மாவட்டக்கில் கடந்த இரு தினங்களாக இரவு நேரத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

விழுப்புரக்கில் கிங்கள்கிழமை மாலை 5 மணிக்குக் கொடங்கி இரவ 9 மணி வரை பரவலாக மழை பெய்கது. தொடர்ந்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இரவு நேரத்தில் மழை பெய்தது.

இந்த வகையில், செவ்வாய்க்கிழமை காலை வரை, விழுப்புரத்தில் 25 மில்லி மீட்டரும், உளுந்தூர்பேட்டையில் 14, வானூரில் 17, மரக்காணத்தில் 8, திருக்கோவிலூரில் 7.5, செஞ்சியில் 7, திண்டிவனத்தில் 5 மில்லி மீட்டர் என்று மாவட்டத்தில் 183 மில்லி மீட்டர் மழை பதிவானது. இதன் மூலம், சராசரியாக 10 மில்லி மீட்டர் மழை பதிவாகியிருந்தது. தொடர் மழையினால், குளிர்ந்த நிலை ஏற்பட்டு பொது மக்களும், நடப்பு பருவத்திற்கு உழவுப் பணி மேற்கொண்டுள்ள விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வாழை சாகுபடியில் தமிழகம் முதலிடம்: ஆட்சியர்

இந்தியாவில் வாழை சாகுபடியில் தமிழகம் முதன்மை வகிக்கிறது என்றார் மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண்.

கன்னியாகுமரி மாவட்ட தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் முளகுமூடு, கல்லுவிளை, ஆசீர் கலையரங்கத்தில் 2 நாள் வாழை சாகுபடி கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

நிகழ்ச்சிக்கு ஆட்சியர் தலைமை வகித்து, கருத்தரங்கை தொடங்கிவைத்து பேசியதாவது: இந்தியாவில் தமிழ்நாடு, வாழை உற்பத்தியில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது. வாழைப்பழம் மட்டுமன்றி இலை, பூ, தண்டு போன்ற பாகங்களும் உணவு பொருளாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, வாழைத் தண்டுகள், சிறுநீரகக் கோளாறுகளை சரி செய்யவும், விஷக்கடி மருத்துவத்திலும் பயன்படுகிறது. வாழை அதிகமாக சாகுபடி செய்யும் மாவட்டங்களில் இம்மாவட்டமும் ஒன்றாகும். இங்கு மட்டி, செங்கதலி, நேந்திரன் மற்றும் செவ்வாழை போன்ற ரகங்கள் 6,100 ஹெக்டரில் பயிரிடப்படுகின்றன. விவசாயிகள் தரமான வாழைக்கன்றுகள் தேர்வு செய்து, சிறந்த தொழில்நுட்பங்களான சொட்டு நீர்ப்பாசனம், உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மற்றும் அறுவடை பின் செய் நேர்த்தி செய்தல் போன்றவற்றை கடைப்பிடித்து, அதிக லாபம் பெற வேண்டும்.

இதற்கு இக்கருத்தரங்கத்தில் வழங்கப்படும் அறிவுரைகளை விவசாயிகள் பின்பற்றுவதுடன், பிற விவசாயிகளுக்கும் இதனை எடுத்துக் கூற வேண்டும். விவசாயத்தில் தங்களுக்குள் எழும் சந்தேகத்தை தீர்த்துக்கொள்வதற்கு இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

கருத்தரங்கத்தில் 9 வட்டாரங்களைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட வாழை விவசாயிகள் கலந்துகொண்டனர். சிறப்பான முறையில் வாழை சாகுபடி செய்த 12 விவசாயிகளுக்கு, மாவட்ட ஆட்சியர் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.

வாழை ரகங்கள் மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் இடம்பெற்ற கண்காட்சியை ஆட்சியர் பார்வையிட்டார்.

இதில், இணை இயக்குநர் (வேளாண்மை) என். இளங்கோ, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) எம். நிஜாமுதீன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் எம். அசோக் மேக்ரின், செயற்பொறியாளர் பி. ஆனந்தராஜா, வேளாண் துணை இயக்குநர் வி.ஆர். சுரேஷ் ஜோஸ், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் யோ. ஷீலா ஜாண், தோட்டக்கலை அலுவலர் கார்த்திக் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்

தாராபுரத்தில் அட்மா திட்ட விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தாராபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு, வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.எம்.ஞானசேகரன் தலைமை வகித்தார். விவசாயிகள் ஆலோசனைக் குழுத் தலைவர் மனோகரன், முன்னோடி விவசாயி திருஞானசம்பந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், கால்நடைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் கோமாரி நோய் தடுப்பூசியின் அவசியம் குறித்து கால்நடை உதவி மருத்துவர் வெங்கடேசன் பேசினார். தோட்டக்கலைத் துறையில் மானியம் பெறும் வழிமுறைகள் பற்றி அத்துறையின் உதவி அலுவலர் சிங்காரவேலு விளக்கவுரை ஆற்றினார். விதைச் சான்று துறையின் நடைமுறை பற்றியும், விற்பனையாளர்களிடம் விதை வாங்கும் போது ரொக்கப் பட்டியலிட்டு வாங்குவது குறித்து விவசாயிகளுக்கு விதை சான்று அலுவலர் மனோஜ்குமார் அறிவுரை வழங்கினார். அட்மா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கான சுற்றுலா, செயல்விளக்க திடல்கள், பண்ணை பள்ளி குறித்து அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் விஜய்ஆனந்த் எடுத்துரைத்தார். கூட்டத்தில், உதவி தொழில்நுட்ப மேலாளர் ரா.சித்ராதேவி மற்றும் அனைத்து துறை அதிகாரிகள், விவசாயிகள் பங்கேற்றனர்.

## கொடுமுடி வட்டாரப் பகுதிகளில் மழை

கொடுமுடி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மாலை ஒரு மணி நேரம் மழை பெய்தது.

கொடுமுடி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் காலை 10 மணி முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சில நேரங்களில் வெய்யில் விட்டுவிட்டு அடித்து. கொடுமுடி, கா.ஒத்தக்கடை, வெங்கம்பூர், தாமரைப்பாளையம், நகப்பாளையம், சாலைப்புதூர், ஊஞ்சலூர், தேவம்பாளையம், சிவகிரி ஆகிய பகுதிகளில் மாலை 4 மணியளவில் தொடங்கிய மழை 5 மணி வரை நீடித்தது.

இந்த மழைக் காரணமாக அப்பகுதி விவசாயிகள் மற்றும் பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கொய்மலர் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

கோத்தகிரி பகுதியில் கொய்மலர்களின் விலை திடீரென உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளான கேர்கம்பை, கூக்கல், மசக்கல், கட்டபெட்டு, அரவேணு பகுதிகளில் மலைக் காய்கறிகளுக்கு அடுத்தபடியாக கொய்மலர் சாகுபடி அதிக அளவில் நடைபெற்று வருகிறது.

கொய்மலர்களான கார்னேஷன், லில்லி, ரெட்ரோஸ், நவரத்னா ஆகிய மலர் வகைகளின் விலை கடந்த மாதம் கடும் விலை வீழ்ச்சியடைந்து, பூ ஒன்றுக்கு ரூ. 1 மட்டுமே விலையாக விவசாயிகளுக்குக் கிடைத்தது.

இந்நிலையில், விநாயகர் சதுர்த்தி, திருமண நாள்கள் வருவதால் 15 நாள்கள் வரை கெடாமல் இருக்கும் கொய்மலர்களில் விலை தற்போது 10 மடங்கு உயர்ந்துள்ளது.

இதனால், பூ ஒன்றுக்கு ரூ. 10 வரை தற்போது விலை கிடைக்கிறது. இதனால் கொய்மலர் பயிரிட்டுள்ள விவசாயிகளும், வெளியூர், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மாவட்டத்தில் மரக்கன்றுகள் நடும் திட்டம்: 1.98 லட்சம் நாற்றுகள் உற்பத்தி

மரக்கன்று நடும் திட்டத்தின் கீழ் வனச் சரகத்துக்கு உள்பட்ட பகுதிகளில் 1.98 லட்சம் மரக்கன்று நாற்றுகள் உற்பத்தி செய்து தயார் நிலையில் உள்ளது. இதுகுறித்து நாமக்கல் வனச்சரகர் கனகரத்தினம் கூறியது: தமிழக அரசின் மாபெரும் மரக்கன்று நடும் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில், நாமக்கல் சரகத்துக்குள்பட்ட நடுக்கோம்பை, எருமப்பட்டி வனப் பணியாளர் குடியிருப்பு அருகில், ராசிபுரம் கோட்டத்துக்குள்பட்ட கோரையாறு, முள்ளுக்குறிச்சி கோட்டத்துக்குள்பட்ட மூலக்குறிச்சி ஆகிய பகுதிகளில் மரக்கன்று நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு 1 மீட்டர் உயரத்துக்கு வளர்ந்து தயார் நிலையில் உள்ளது. அதன்படி நாமக்கல் சரகத்தில் 1.10 லட்சம், ராசிபுரம், முள்ளுக்குறிச்சி சரகத்தில் தலா 44 ஆயிரம் என மொத்தம் 1.98 லட்சம் மரக்கன்று நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இங்கு அலங்கார கொன்றை, தகரை, புளியன், புங்கன், சிசு, வாகை, வில்வம், சொர்க்கம், இயல்வகை, நாவல், ஆயன், மகிழம், மங்தாரை, பாதாம், வேம்பு என 15 வகையான மரக்கன்று நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றார். இந்த நாற்றுகளை, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்களைக் கொண்டு ஊராட்சிப் பகுதிகளில் நடவு செய்து பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக குழி எடுக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது என ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பரமத்தி வேலூர் ஏலச் சந்தையில் பூக்கள் விலை உயர்வு

பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பூக்கள் அதிக விலைக்கு ஏலம் போனது.

அண்ணாநகர், கபிலர் மலை, பரமத்தி, எல்லைமேடு, கரசப்பாளையம், செங்கப்பள்ளி, பெரிய சோழிபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பூக்கள் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும் பூக்களை விவசாயிகள் பரமத்தி வேலூரில் உள்ள பூக்கள் ஏலச் சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். பரமத்தி வேலூர், ஜேடர்பாளையம், கபிலர் மலை, பரமத்தி, கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பூக்களை ஏலம் எடுத்துச் செல்கின்றனர்.

நிகழ்வாரம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏல விவரம் (அடைப்புக் குறிக்குள் கடந்த வார விலை நிலவரம்)

குண்டு மல்லி ரூ.700 (ரூ. 400) க்கும், சம்மங்கி ரூ.150 (ரூ. 80) க்கும், அரளி ரூ.100 (ரூ. 70), ஜாதிமல்லி ரூ.350 (ரூ. 200) க்கும், பட்டன் ரோஜாப்பூ ரூ.160 (ரூ.100) க்கும் ஏலம் போனது. கடந்த வாரத்தை விட நிகழ்வாரம் பூக்கள் அதிக விலைக்கு ஏலம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 72.24 அடியாக உயர்வு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை காலை 72.24 அடியாக உயர்ந்தது. அணைக்கு நொடிக்கு 7,164 கன அடி வீதம் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1,250 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 34.65 டி.எம்.சி. அணைக்கு வரும் நீரின் அளவு சீராக இருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

## தஞ்சாவூரில் 105 மி.மீ. மழை

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக தஞ்சாவூரில் 105 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் திங்கள்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்):

தஞ்சாவூர் 105, வெட்டிக்காடு 90, அணைக்கரை 89, கல்லணை 53.6, குருங்குளம் 46, மஞ்சலாறு 44.4, பூதலூர் 42.6, திருவையாறு, ஈச்சன்விடுதி தலா 42, வல்லம் 40, கும்பகோணம் 39, பட்டுக்கோட்டை 31, நெய்வாசல் தென்பாதி 30.6, திருக்காட்டுப்பள்ளி, திருவிடைமருதூர் தலா 29, பாபநாசம் 26, ஒரத்தநாடு 25.6, அதிராம்பட்டினம் 23, அய்யம்பேட்டை, பேராவூரணி தலா 14, மதுக்கூர் 11.4.

## சிவகங்கை மண்டலத்துக்கு 1000 டன் நெல்

நீடாமங்கலத்திலிருந்து சிவகங்கை மண்டலத்துக்கு 1,000 டன் எடையுள்ள நெல் மூட்டைகள் அரவைக்காக சரக்கு ரயிலில் திங்கள்கிழமை அனுப்பி வைக்கப்பட்டன.

பாமணி மத்திய சேமிப்புக் கிடங்கு மற்றும் திறந்தவெளி சேமிப்பு மையங்களில் இருந்து 1,000 டன் எடையுள்ள பொதுரக நெல் மூட்டைகள் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டன. நுகர்பொருள் வாணிபக்கழக அலுவலர்கள் முன்னிலையில் சுமைதூக்கும் தொழிலாளர்கள் நெல் மூட்டைகளை சரக்கு ரயிலின் 29 பெட்டிகளில் ஏற்றினர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஒருங்கிணைந்த கால்நடை பண்ணையம்



ஆடு, மாடு வளர்ப்பது குறித்து நவீன பயிற்சிகள் வந்து விட்டன. சிறிய முதலீட்டில் அதிக வருமானம் தரும் தொழிலாக கால்நடை வளர்ப்பு மாறியுள்ளது. கொட்டில்முறை ஆடு வளர்ப்பில் சாப்ட்வேர் இன்ஜினியர்கள் பலர் ஆர்வத்துடன் ஈடுபட்டு லாபத்தை அள்ளுகின்றனர். சுய தொழில் துவங்குவோருக்கு ஒருங்கிணைந்த பண்ணையம் அமைத்தல் சிறப்பான எதிர்காலத்தை உருவாக்கி தருகிறது.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையின் தொலைநிலை கல்வி இயக்கத்தின், மதுரை திருப்பரங்குன்றம் கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆய்வு மையம் சார்பில் ஒருங்கிணைந்த கால்நடை பண்ணையம் குறித்து ஒரு மாத சுய வேலை வாய்ப்பு பயிற்சிகளை நடத்துகிறது. இதில் நவீன முறையில் கறவை மாடு வளர்ப்பு, பரண் மேல் ஆடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, ஜப்பானிய காடை வளர்ப்பு, முயல் வளர்ப்பு, வெண்பன்றி வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த கால்நடை பண்ணையங்கள் அமைத்தல் போன்றவை நடத்தப்படுகிறது. சுய தொழில் துவங்க ஆர்வமுள்ளோர், இளைஞர்கள், பெண்கள், மகளிர் சுய உதவிக்குழு பெண்கள், விவசாயிகள், வேலையில்லா பட்டதாரிகளுக்கு அரியதோர் வாய்ப்பு என்கிறார் துறைத் தலைவர் டாக்டர் பழனிச்சாமி. பயிற்சியின் போது பண்ணைகளை நேரில் பார்வையிடுதல், சுய தொழில் துவங்க வங்கி கடன் பெறுவதற்கான ஆலோசனைகள், பண்ணை பராமரிப்பை தொடர்ந்து கண்காணித்தல், கால் நடைகளின் சந்தை வாய்ப்பு ஆலோசனை வழங்குவது கூடுதல் சிறப்பு. தொடர்புக்கு 0452- 248 3903.

## கேட்டதும் கிடைக்குது விவசாய ஆலோசனை



விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்கவும், ஆலோசனை வழங்கவும் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், ஐந்து பிரத்யேக இலவச வசதிகளை அறிமுகம் செய்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி கிளை நுட்பவியலாளர் தேவராஜ் கூறியதாவது: விவசாயிகளுக்கு சாகுபடி தொடர்பான ஆலோசனைக்கு 99422-

11044 என்ற அலைபேசி வசதி உள்ளது. விவசாயிகள் தங்கள் இடத்தின் வானிலை தகவல்கள், மண், பாசன நீர் பரிசோதனை மற்றும் மேலாண்மை தகவல்கள், விதை, ரகங்கள் தேர்வு, பயிர் பாதுகாப்பு, நவீன தொழில்நுட்பங்கள், சந்தை நிலவரம், அரசு நலத்திட்டங்கள், பயிர் மேலாண்மை தகவல்களை அனைத்து நாட்களிலும், 24 மணிநேரமும் பெறலாம்.

**வல்லுனர் விளக்கம்** : மற்றொரு முறையில் போன் பதிவுக்கு விளக்கமும் அளிக்கப்படுகிறது. 95431 -26425ல் அழைத்தால் விவசாயம் தொடர்பான அனைத்து சந்தேகங்களுக்கும் தீர்வு பெறலாம். இதில் முன்னதாகவே விவசாயிகளின் கேள்விகளும், தொடர்பு எண் உள்ளிட்ட விபரங்களும் பதிவு செய்யப்படும். விவசாயியின் அலைபேசி எண்ணுக்கு வல்லுனர் ஒருவர் நேரடி விளக்கம் அளிப்பார்.

**நேரடி முகாம்கள்**: முன்பதிவு செய்வோரின் தேவைக்கேற்ப, சம்பந்தப்பட்ட இடத்திற்கே வந்து ஆடியோ, வீடியோ முறைகளில் வல்லுனர்களில் கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு செய்யப்படும். விவசாயம், கால்நடை வளர்ப்பு மட்டுமின்றி சுகாதாரத்திற்கான இணையவழி கலந்தாய்வு முகாம்களும், மருத்துவ, சுகாதார ஆலோசனைகளும் வழங்கப்படும். பல்வேறு பிரிவுகளில் மாதத்திற்கு இரு முறை வீதம் இந்நிகழ்ச்சி வெவ்வேறு இடங்களில் நடத்தப்படுகிறது. கூடுதல் விவரங்களுக்கு 97861- 38170ல் அழைக்கலாம் என்றார்

## கொய்யா சாகுபடியில் 'பஞ்ச தந்திரம்'



"காடு பொட்டக்காடு... செங்காத்து வீசும் காடு... வீடு கீத்து வீடு... எலியோடு எங்கபாடு," என கவிஞர் வைரமுத்து தனது பாடல் ஒன்றில் ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை வைர வரிகளால் செதுக்கியிருப்பார். பொட்டக்காடு மாதிரியும் அல்லாமல், விளையும் பூமியாகவும் அல்லாமல் கிராவல் மண், கள்ளிச்செடிகள் நிறைந்த கரடு, முரடான கிராவல் காட்டில் இயற்கை விவசாயம் செய்து சாதிக்கிறார் விவசாயி ஏ.கே.முருகானந்தம். கூட்டுறவு பாடத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். 44 வயது நிரம்பிய முருகானந்தம் தனது படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லையே என்பதற்காக சோர்வடையவில்லை.

**'லக்னோ 49' ரகம்**: தனக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் கிராவல் காட்டில் கள்ளிச்செடிகளை வெட்டி சுத்தப்படுத்தினார். கருவேல மரங்களை வேருடன் பிடுங்கி அழித்தார். ஆழ்துளை கிணறு அமைத்தார். நிலத்தை சமன் செய்து மூன்று அடி வீதம் 100 பள்ளங்களை தோண்டினார். அதில் நாட்டு மாட்டின் சாணம் தலா 5 கிலோ வீதம் மண்ணுடன் கலந்து வீரிய ஒட்டு ரகத்தை சேர்ந்த 'லக்னோ 49' கொய்யா கன்றுகளை நடவு செய்தார். 11 மாதம் கடந்த நிலையில் குறைந்தளவு விதைகள், அதிகளவு சதைப்பகுதி என கொய்யா ஒன்று 500 கிராம் எடையில் அதிக ருசியுடன் காப்புக்கு வந்துள்ளது.

**கிராவல் காட்டு கொய்யா:** கிராவல் காட்டை கொய்யா காடாக மாற்றியது குறித்து முருகானந்தம் கூறியதாவது: தேவசேரி எனது சொந்த ஊர். இதனருகே ஆதனூார் ஊராட்சிக்கு உட்பட்ட சல்வார்பட்டியில் எனக்கு சொந்தமான இரண்டு ஏக்கரில் கள்ளிச்செடிகள் மிகுந்து காணப் பட்டன. வெட்ட வெளியில் விஷப்பாம்புகள் நடமாட்டம் அதிகளவு இருந்தது. கள்ளிச் செடிகளை அகற்றி இடத்தை சுற்றிலும் வேலி அமைத்தேன். தினமும் காலை 7:00 முதல் காலை 11:00 மணி வரை தோட்ட வேலைகளை கவனித்தேன். ஸ்ரீவில்லிப்புத்தூர் தோட்டக் கலைத்துறையில், லக்னோ 49 ரக கொய்யா கன்று ஒன்று 60 ரூபாய்க்கு வாங்கி நடவு செய்தேன். இலைகள், பூக்களின் கீழ் மாவு பூச்சிகள் அடை அடையாய் அப்பின. அவற்றை வெறும் தண்ணீரை தெளித்து அழித்தேன்.

**பஞ்ச தந்திர தொழில்நுட்பம்':** செடிகளுக்கு இயற்கையான சத்து கிடைக்க வேண்டும் என்பதற்காக கோமியம் மூலம் பஞ்ச கவ்யம், ஜீவாமிர்தம், வேப்பங்கொட்டை புண்ணாக்கு, பூச்சிகளை அழிக்கும் இஞ்சிப் பூண்டு கரைசல், வேப்ப எண்ணெய் கரைசல் என இயற்கை முறையிலான கொய்யா வளர்ப்பில் 'பஞ்ச தந்திரம்' தொழில்நுட்பத்தை கையாண்டேன்.

இதை தோட்டக்கலைத்துறை மூலம் தெரிந்து கொண்ட பலர், எனது தோட்டத்துக்கே வந்து கொய்யாவை விலைக்கு வாங்கி செல்கின்றனர். மரம் ஒன்றில் 30 கிலோ கொய்யா கிடைக்கிறது. செலவுகளை கழித்து 100 மரங்களில் இருந்து மாத வருமானம் சராசரியாக 10 ஆயிரம் ரூபாய் வரை கிடைக்கிறது. ஊடுபயிராக நாட்டு முருங்கை, வாழை, பப்பாளி, கீரை, தக்காளி நடவு செய்துள்ளேன்.

**ரசாயன உணவுக்கு குட்பை**: தினமும் காலை இரண்டு மணி நேரம் தோட்டத்தை பராமரிக்கிறேன். ஏனைய நேரங்களில் அலங்காநல்லூரில் செருப்புக்கடை, சிமெண்ட் கடையை பார்த்து கொள்கிறேன்.

மதுரை தோட்டக்கலைத்துறை மூலம் கொய்யா கன்றுகளை மானிய விலையில் பெற்று மேலும் இரண்டு ஏக்கரில் கொய்யா நடவு செய்யவுள்ளேன். கொய்யாவிற்கு விலை எப்போதும் ஏறுமுகம் தான். ரசாயன கலப்பு இன்றி

இயற்கை முறையில் பழங்களை விளைவித்து வழங்குவது முழு திருப்தியை தருகிறது. உடலுழைப்பு, வருமானம் கிடைப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது என்றார். தொடர்புக்கு 98433 79014 **- கா.சுப்பிரமணியன், மதுரை.**

## சென்னிமலையில் பலத்த மழை

சென்னிமலை: சென்னிமலை டவுன் மற்றும் சுற்றுபுற பகுதியில் நேற்று கனமழை பெய்தது. சென்னிமலை, வெள்ளோடு, ஈங்கூர் பகுதிகளில் நேற்று மாலை பலத்த மழை பெய்தது. கடந்த ஒரு வாரமாக கடும் வெயில் இருந்தது. இதனால் இரவு நேரத்தில் புழுக்கம் அதிகமானது. இந்நிலையில் நேற்று மாலை, 3 மணி முதல் சென்னிமலை டவுன் பகுதி மட்டுமின்றி வெள்ளோடு, ஈங்கூர் பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. இதேபோல் கொடுமுடியிலும் நேற்று மாலை, 1 மணி நேரம் கனமழை கொட்டியது. இதனால் காளிங்கராயன் பாசன பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## மாவட்டத்தில் பரவலாக மழை

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் நேற்று மாலை, பரவலாக மழை பதிவானது. மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று மாலை, 3.15 முதல், 4 மணி வரை பரவலாக மழை பெய்தது. தொடர்ந்து வானம் மேக மூட்டமாக காணப்பட்டது. 4.30 மணிக்கு மேல் லேசான தூறல் அவ்வப்போது விழுந்ததுடன், குளிர்ந்த காற்று வீசியது.

## நாளை முதல் கோமாரி தடுப்பூசி முகாம்

கரூர்: கரூர் மாவட்டத்தில், நாளை முதல் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துவங்குகிறது. இதுகுறித்து, கலெக்டர் கோவிந்தராஜ் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில், அனைத்து கிராமம் மற்றும் குக்கிராமங்களில் தேசிய கோமாரி நோய் தடுப்பூசி, பத்தாவது சுற்று போடப்பட்டுள்ளது. தற்போது, நாளை முதல் (1ம் தேதி), 21ம் தேதி வரை தடுப்பூசி போடும் பணிகள் நடக்கும். கரூர் மாவட்டத்தில் உள்ள, ஒரு லட்சத்து, 90 ஆயிரம் பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கும் போடப்பட உள்ளது. இதற்கென உருவாக்கப்பட்ட குளிரூட்டும் அறையில் மருந்துகள் தயார் நிலையில் உள்ளன. அங்கிருந்து ஒவ்வொரு கிராமத்திற்கும் தடுப்பூசி பணிகள்

மேற்கொள்ளப்படும். கோமாரி நோயானது, கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயினால் இறப்புகள் குறைவாக இருந்த போதிலும், கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைவு மற்றும் எருதுகளின் வேலைத்திறன் குறைவு, கறவை மாடுகளின் சினைப்பிடிப்பு தடைபடுவது போன்ற பாதிப்பு ஏற்படும். குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடக்கில், தங்களது கால்நடைகளுக்கு (கோமாரி நோய்) தடுப்பூசி தவறாமல் போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நாமக்கல்லில் திடீர் கனமழை

நாமக்கல்: நாமக்கல்லில், நேற்று மாலை, ஒரு மணி நேரம் பெய்த கனமழையால், குளிர்ந்த காற்று வீசியது. தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. நாமக்கல் மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக காலை முதல், மாலை வரை வெயில் வாட்டி வதைக்கிறது. அதன் காரணமாக, மக்கள் புழுக்கத்தில் சிக்கித் தவிக்கின்றனர். மாலையில், மழை பெய்து, குளிர்ச்சியை ஏற்படுத்துவதால், மக்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். அதேபோல், நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலை, 4.15 மணிக்கு, திடீரென கனமழை பெய்யத் துவங்கியது. ஆர்ப்பாட்டம் இன்றி பெய்யத் துவங்கிய மழை, ஒரு மணி நேரம் நீடித்தது. அதனால், தாழ்வான பகுதிகளில், மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. சாலையில் சென்ற வாகன ஓட்டிகள், மழையில் நனைந்தபடி செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டனர். ஒரு சிலர் குடையை பிடித்தபடி நனையாமல் சென்றனர். கனமழை காரணமாக, குளிர்ந்த காற்று வீசியதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அலங்காநல்லூரில் பலத்த காற்றுடன் கனமழை

மதுரை: மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. ஆதனூர், மூடுவார்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் அரைமணி நேரத்திற்கும் மேலாக கனமழை பெய்து வருகிறது.

### வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி

சேலம் : சேலம் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மையத்தில், வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி நடந்தது. சேலம் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி நேற்று (30ம்தேதி) நடந்தது. பயிற்சிக்கு, ஆராய்ச்சி மைய தலைவர் பேராசிரியர் ஜெயந்தி தலைமை வகித்தார். பயிற்சியில், வெண்பன்றி இனங்கள், கொட்டகை அமைத்தல், தீவனங்கள் பராமரிப்பு, குடற்புழு நீக்கம், நோய்களின் தாக்கம், நோய்களுக்கான தடுப்பூசி மற்றும் மருந்துகள், முதலுதவி சிகிச்சை, குட்டிகள் பராமரிப்பு, ஆண் பன்றிகளுக்கு விதை நீக்கம், குட்டிகள் வளர்த்து அதிக லாபம் பெறுவது எப்படி? ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர்கள் ரவி மற்றும் பாலாஜி ஆகியோர் பயிற்சி அளித்தனர். இதில் மாவட்டம் முழுவதிலும் இருந்து ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### புதன்சந்தையில் மாடுகள் விலை உயர்வு

சேந்தமங்கலம் : நாமக்கல் மாவட்டம் புதன்சந்தையில் நேற்று மாடு சந்தை கூடியது. மழையின் காரணமாக வெளியூர்களிலிருந்து குறைந்த அளவே மாடுகள் விற்பனைக்கு வந்திருந்தது. வளர்ப்பு மாடுகளின் தேவை அதிகரித்துள்ளதால், கேரள மாநிலம் மற்றும் பொள்ளாச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அதிகளவில் வியாபாரிகள் வந்திருந்தனர். இதனால் மாடுகளுக்கு கடும் கிராக்கி

ஏற்பட்டு விலை உயர்ந்தது. கடந்தவாரம் ரூ.25 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட இறைச்சிமாடு, இந்தவாரம் ரூ.27 ஆயிரத்திற்கு விற்கப்பட்டது. ரூ.40 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவைமாடு, ரூ.42 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது. ரூ.6 ஆயிரத்துக்கு விற்கப்பட்ட கன்றுக்குட்டி, ரூ.8 ஆயிரத்துக்கு விற்கப்பட்டது.

## ரூ.30 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை ஏல மையத்தில் 760 மூட்டை மஞ்சள் ரூ.35 லட்சத்திற்கு ஏலம் போனது. ராசிபுரம் கிளை நாமகிரிப்பேட்டை கூட்டுறவு ஏல மையத்தில் வாரந்தோரும் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெறுவது வழக்கம். அதன்படி நேற்று நடந்த ஏலத்தில் விரலி ரக மஞ்சள் 550 மூட்டை, உருண்டை ரக மஞ்சள் 200 மூட்டை, பனங்காளி மஞ்சள் 10 மூட்டை என மொத்தம் 760 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. இதில் விரலி ரகம் குறைந்த பட்சமாக ரூ.7,896 முதல் அதிக பட்சமாக ரூ.9,812 வரை ஏலம் போனது. உருண்டை ரகம் குறைந்த பட்சம் ரூ.7,412 முதல் அதிக பட்சமாக ரூ.8,500க்கு ஏலம் போனது. அதேபோல பனங்காளி ரகம் குறைந்த பட்சமாக ரூ.13,272க்கும் அதிக பட்சமாக ரூ.20,200க்கும் ஏலம் போனது. நேற்று ஓரே நாளில் ரூ.35 லட்சத்திற்கு வர்த்தகம் நடைபெற்றது.

## நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்தில் பயன்பெற விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டத்தில் பயன்பெற விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இது குறித்து மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை வெளியிடப்பட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு தொழிலை, விவசாயிகளிடம் ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக 201617ம் ஆண்டிற்கான கோழியின மேம்பாட்டு திட்டத்தின் மூலம் நாட்டுக்கோழி வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்திற்கான பயனாளிகள் தேர்வு, கால்நடை மருந்தகங்கள், புதுவாழ்வு திட்டம் மற்றும் மகளிர் திட்டம் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக 25 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் ஒரு குழுவாக பதிவு செய்யப்பட்ட பிறகு,

அவர்களுக்கு சிறிய அளவிலான தீவன அரவைக்கூடம் அரசு மானியத்துடன் அமைத்து தரப்படும். எனவே இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், அருகிலுள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்களை அணுகி விண்ணப்பங்களை அளிக்கலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு மீண்டும் தண்ணீர் திறப்பு

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு மீண்டும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் சர்க்கார்பதி நீர் மின்நிலையத்தில் 12 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை ஆடுத்த சர்க்கார்பதியில் நீர் மின் உற்பத்தி நிலையம் உள்ளது. பரம்பிக்குளம் அணையில் இருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் தூணக்கடவு அணைக்கு சென்று, பின் சுரங்கபாதை வழியாக சர்க்கார்பதியை வந்தடைகிறது.

சர்க்கார்பதியில் மின்உற்பத்தி செய்யப்பட்டு, பின் கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் செல்கிறது. கான்டூர் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படும்போது, சர்கார்பதியில் 30 மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தியாகிறது. ஒவ்வொரு ஆண்டும் திருமூர்த்தி மற்றும் ஆழியார் அணைகளுக்கு கான்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் திறந்து விடப்படும்போது, சர்க்கார்பதியில் நீர் மின்உற்பத்தி நிலையம் இயங்குகிறது.

இந்நிலையில், திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்த திருமூர்த்தி அணையிலிருந்து இரண்டாம் மண்டல பாசன பகுதிக்கு, வரும் செப்டம்பர் 11ம்தேதி தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இதையடுத்து, பரம்பிக்குளத்திலிருந்து தூணக்கடவுக்கு தண்ணீர் திறக்கப்பட்டு, பின் கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு கடந்த 10ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது.

பின், இரண்டு வாரத்திற்கு முன்பு திடீர் என்று, தூணக்கடவிலிருந்து கான்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. திடீரென்று திருமூர்த்தி

அணைக்கு கான்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டதால், இரண்டாம் மண்டல பாசனத்துக்கு தேவையான தண்ணீர் கிடைக்க பெறுமா என்ற கவலையில் விவசாயிகள் தவித்தனர். மேலும், திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், நேற்று முதல், மீண்டும் தூணக்கடவு அணையிலிருந்து கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறப்பது துவங்கியது. தூணக்கடவில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் நேரடியாக சர்க்கார்பதி நீர் மின் நிலையத்தில் மின்உற்பத்தி செய்யப்பட்டு, பின் கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணையை சென்றடைகிறது. தற்போது கான்டூர் கால்வாயில் வினாடிக்கு 500கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், சர்க்கார்பதியில் உள்ள நீர் மின்நிலையத்தில் 12 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி துவங்கியுள்ளது. வரும் நாட்களில், தண்ணீர் அளவு அதிகரிக்கும் போது, அந்நேரத்தில் மின் உற்பத்தி 22 மொகவாட்டாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு மீண்டும் தண்ணீர் திறப்பால், இரண்டாம் மண்டல பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்**

காங்கயம்,: காங்கயம் ஒழுங்கு முறை கூடத்தில் விஞ்ஞான முறையில் தானிய சேமிப்பு குறித்து விழிப்புணர்வு கூட்டம் நேற்று நடைபெற்றது.இந்த கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் மோகனசுந்தரம், வேளாண்மை அலுவலர் மணிவேல்முருகன், சாலினி, விற்பனை கூட கண்காணிப்பாளர் சிவராமகிருஷ்ணன் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர் லட்சுமிகாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதில் தானிய சேமிப்பு உற்பத்தியாளர் குழுக்கள் அறுவடை பின்செய் நேர்த்தி. அக்மார்க் தர சான்று மற்றும் விற்பனைக்கூட பயன்பாடு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. விவசாயிகள் தாங்கள் விளைவிக்கும் தானியங்களை எங்கெல்லாம் சந்தைப்படுத்தலாம் என்பது குறித்தும். உழவர் பாதுகாப்பு திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும் விளக்கி கூறப்பட்டது.

## குன்னூர் ஏல மையத்தில் 95% தேயிலை தூள் விற்பனை

குன்னூர், : குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 34வது ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 10.15 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 7.8 லட்சம் கிலோவும்.டஸ்ட் ரகம் 3.7 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றதில் 95 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

இதில் அனைத்து ரக தேயிலை தூளுக்கும் ரூ.2 விலை உயர்ந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.76 முதல் ரூ.77 உயர் வகை ரூ.98 முதல் ரூ.140, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.81 முதல் ரூ.86 வரையிலும் உயர் வகை ரூ.105 முதல் ரூ.160 வரை விலை கிடைத்தது.சிடிசி ரகத்திற்கு அதிகபட்சமாக ரூ.207 ஆர்த்தோடெக்ஸ் ரகத்திற்கு ரூ.291 விலை வழங்கப்பட்டது. இதன்படி விற்பனையான தேயிலை தூளின் மதிப்பு 8.86 லட்சமாகும்.

அடுத்த ஏலம் வரும் வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் நடக்கிறது. இதில் மொத்தம் 12.06 கிலோ விற்பனைக்கு தயாராக உள்ளது.

## குன்னூரில் பரவலான மழை:

குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக மேகமூட்டத்துடன் கூடிய சாரல் மழை நீடித்து வருகிறது.இதில், குன்னூர், கொலக்கம்பை, தூதூர்மட்டம், சேலாஸ், காட்டேரி, கேத்தி பாலடா, வெலிங்டன், அருவங்காடு உள்ளிட்ட பகுதிகளில் நாள்தோறும் மதியத்திற்கு மேல் மழை பெய்து வருகிறது. இதனால் சீதோசன நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. வெயிலின் தாக்கம் குறைந்து கடும் குளிர் நிலவி வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்துள்ளது.

## ஊட்டியில் கன மழை

ஊட்டி, : நீலகிரி மாவட்டத்தில் நீண்ட நாட்களுக்கு பின் நேற்று பிற்பகல் சுமார் 2 மணி நேரம் கனமழை பெய்தது. ஆண்டுதோறும் நீலகிரியில் மே மாதம் இறுதி வாரத்தில் பருவமழை துவங்கி நவம்பர் மாதம் வரை இடைவிடாமல் பெய்வது வழக்கம்.ஆனால், இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவிற்கு பெய்யவில்லை. மாறாக, காற்று மற்றும் சாரல் மழை மட்டுமே ெபய்தது. மாவட்டத்தில் மின் உற்பத்திக்காக பயன்பட்டு வரும் அப்பர்பவானி, அவலாஞ்சி, பார்சன்ஸ்வேலி, போர்த்திமந்து, பைக்காரா உட்பட அனைத்து அணைகளின் நீர்மட்டமும் வெகுவாக குறைந்தது. மேலும், ஊட்டி நகராட்சி உட்பட்ட அணைகளிலும் நீரின் மிகவும் குறைந்து காணப்படுகிறது.இந்நிலையில், கடந்த மூன்று நாட்களாக நீலகிரி மாவட்டத்தில் பரவலாக சாரல் மழை பெய்து வந்தது. ஊட்டியில் நேற்று காலை முதலே வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது சாரல் மழை பெய்து வந்த நிலையில், மதியம் சுமார் 2 மணி நேரம் கன மழை பெய்தது. இதனால், சேரிங்கிராஸ், மத்திய பஸ் நிலையம், படகு இல்லம் செல்லும் சாலை, கூட்செட் போன்ற பகுதிகளில் மழை நீர் தேங்கியது. பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் பாதிக்கப்பட்டனர். மழை காரணமாக சுற்றுலா தலங்களில் இருந்தவர்கள் வெளியேறியதால், அனைத்து சுற்றுலா தலங்களும் வெறிச்சோடி காணப்பட்டன.

## எடக்குடி வடபாதியில் விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை பயிற்சி

சீர்காழி: சீர்காழி அருகே எடக்குடி வடபாதி ஊராட்சியில் வேளாண்மைத்துறையின் மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்பு திட்டம், பிரதமரின் யோஜனா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை பராமரிப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. சீர்காழி வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்தாஸ் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் ஜான்சன் ரிச்சர்டு ராஜ் முன்னிலை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் சிவக்குமார் வரவேற்றார். சீர்காழி உதவி செயற்பொறியாளர் ஸ்ரீதர், நீர் மேலாண்மை, நீர் சேகரிப்பு, நீர் பாசன முறை, பண்ணைக்குட்டை அமைத்தல், பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இப்பயிற்சி முகாமில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து

கொண்டனர். ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில் நுட்ப மேலாளர் ராஜசேகரன், செல்வக்குமரன் ஆகியோர் செய்திருந்தனர். வட்டார தொழில் நுட்ப மேலாளர் பார்கவி நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைகள்**

கொள்ளிடம்: கொள்ளிடம் அருகே சோதியக்குடி கிராமத்தில் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் தோட்டப்பயிர் விதைகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. வட்டார தோட்டக்கலை அலுவலர் பொன்னி தலைமை வகித்தார். உதவி அலுவலர் செல்வராஜ் வரவேற்றார். விவசாயிகளுக்கு விதைகளை ஊராட்சி தலைவர் தமிழரசி வழங்கினார். கத்திரி, வெண்டை, மிளகாய், தக்காளி, தர்பூசணி உள்ளிட்ட விதைகள் முழு மானியத்தில் வழங்கப்பட்டன. இதேபோல் திருமயிலாடியில் நடந்த விழாவுக்கு ஊராட்சி தலைவர் ஏஷான்பீவி கமாலுதீன் தலைமை வகித்தார். வட்டார தோட்டக்கலை அலுவலர் பொன்னி பங்கேற்று விவசாயிகளுக்கு விதைகளை வழங்கினார். ஊராட்சி துணைத்தலைவர் முத்துவேலன், உதவி அலுவலர்கள் செல்வராஜ், கல்யாணம் மற்றும் பலர் பங்கேற்றனர்.

**சிக்கலில் நாளை தக்காளி பதப்படுத்தும் பயிற்சி**

நாகை: நாகை அடுத்த சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நாளை (1ம் தேதி) காலை 10 மணி அளவில் தக்காளி பதப்படுத்துதல் மற்றும் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் குறித்த தொழில்நுட்ப பயிற்சி நடைபெற உள்ளது. இதில் பதப்படுத்துதலின் முக்கியத்துவம், மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பற்றி செயல்விளக்கம் அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில், விவசாயிகள், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்கள், தொழில் முனைவோர் கலந்து கொண்டு பயன்பெறலாம். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் வேளாண் அறிவியல் நிலையத்தை நேரிலோ அல்லது 04365 246266 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டோ தங்கள் வருகையை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் அனுராதா தெரிவித்துள்ளார்.

## மலைப்பகுதி விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை பயிற்சி

கொடைக்கானல், : கொடைக்கானலில் உள்ள மலைப்பகுதி விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை பயிற்சி தோட்டக்கலைத்துறையினரால் வழங்கப்பட்டது.திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் மலைப் பகுதிகளில் விளைவிக்கப்படும் ஒரு பயிரினத் தாவரங்களான உருளை, காரட், முள்ளங்கி, பீட்ரூட், வெள்ளைப் பூண்டு, பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகளும், இரட்டைப் பருவத் தாவரங்களான, செர்ரி, கொய் மலர்கள் மற்றும் பல பருவத் தாவரங்களான எலுமிச்சை, பிளம்ஸ், பேரிக்காய், பலா உள்ளிட்ட பழ வகைகளும் செழிப்பதற்குண்டான பயிற்சிகளையும், மழை நீரை கையாளுதல், மண் வளம் பேணுதல் குறித்தும் பிரயண்ட் பூங்காவில் தோட்டக் கலைத்துறையினரால் மலைப் பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதில் கொடைக்கானல் மலைப் பகுதியைச் சேர்ந்த விவசாயப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். இந்த பயிற்சிகளை இணை இயக்குனர் மோகன் ராம், கள ஆய்வாளர் கார்த்திக் ஆகியோர் நடத்தினர்.